SRI A. GOVINDASAMY : 1958–59-ம் ஆண்டில் ஆதிதிராவிட மாணவர்களுக்கும், பிற்பட்ட மாணவர்களுக்கும் ப்ரொபஷனல் காலேஜில் படிப்பதற்கு சகாய நிதி ஒதுக்கவில்லை. இதனுடைய காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அங்கத்தினர் கேட்ட கேள்விக்குத் தகுந்தவாறு பதிலளிக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால்தான் பதில் சொல்ல முடியும்.

SRI K. VINAYAKAM : ஸார், பிற்பட்ட இனத்தவர்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய மானியம் ஒரு வருஷத்தில் 91,000 ரூபாய். மறு வருஷத்தில் அது குறைந்து 51,000 ரூபாயாக இருக்கிறது.

MR. SPEAKER : The same question was put by another hon. Member and was answered by the Hon. Minister.

SRI K. VINAYAKAM : What was the answer, Sir?

MR. SPEAKER : The Hon. Minister wanted a separate question to be put.

THE HON. SRI P. KAKKAN : சபாநாயகர் அவர்களே, 1958–59-ல் ஜாஸ்தி மாணவர்கள் இல்லாமலிருந்திருந்தால் அதிகமாகக் கொடுக்காமல் இருந்திருக்கலாம். ஏதாவது ஒரு தகுந்த காரணத்தினால்தான் இம் மாதிரி இருக்கும். அதற்குத்தான் தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லுகிறேன் என்று நான் பதில் சொன்னேன்.

Quantity of electrical energy used in the State

* 1068 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

தற்போதைய சென்னை ராஜ்யத்தில் எத்தனை கிலோ வாட் (kilowatts) மின்சாரம் உபயோகிக்கப்படுகிறது ?

THE HON. SRI V. RAMAIAH : 1,155 million units during 1958.

SRI N. R. THIAGARAJAN : 1947-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதியன்று எவ்வளவு இருந்தது ?

MR. SPEAKER : How can the Hon. Minister answer the question? The hon. Member may put a separate question.

Brick Makers' Co-operative Societies in North Arcot District

*1069 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் எவ்வளவு இருக்கின்றன ?

(ஆ) அந்தச் சங்கங்களின் முதலீடு (Working Capital) எவ்வளவு ?

(இ) அரசாங்கம் கடனாகவும், உதவி நிதியாகவும் அளித்த தொகை எவ்வளவு ?

(ஈ) 1958-ம் ஆண்டில் அந்தச் சங்கங்களின் உற்பத்தி விற்பனை லாபம் எவ்வளவு ?